<u>வாக்குமூலம்</u>

<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>

<u>வழக்கு எண் : SC.No. 443/2016</u>

<u>வழக்கு சாட்சி PW–3</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | குரு சண்முகப்பிரியா | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சண்முகவேல் | தொழில் | : | ஊராட்சி மன்றத்தலைவர் |
| கிராமம் | : | சுந்தரேசபுரம் | வயது | : | 40 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of November 07th, 2025.

**(4,6,7 எதிரிகள் ஆஜரில்லை. இதர எதிரிகள் ஆஜர். கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

<u>முதல் விசாரணை :</u>

நான் சுந்தரேசபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் போகநல்லூர் ஊராட்சி மன்றத்தலைவராக பணிபுரிந்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1 மருதைய்யா எனது மாமனார். அ.சா.2 ராஜேந்திரன் எனது கணவர். 2013 – 2017 ஆம் ஆண்டுகளில் எனது கணவர் ராஜேந்திரன் போகநல்லூர் ஊராட்சிமன்றத் தலைவராக இருந்து வந்தார். 15.02.2013 ம் தேதி, வெள்ளிக்கிழமை மாலை 06.30 –07.30 மணியளவில் எனது வீட்டிற்கு முன்பு இசக்கிபாண்டியனின் அண்ணன் மகன் சதீஷ் என்பவர் பைக்கில் வந்த "வீட்டில் ஆம்பிளைங்க இருக்கிறாங்களா?" என்று 2, 3 தடவை கேட்டுக்கொண்டே ரோட்டில் போவதும், வருவதுமாக இருந்தார்.

அதன் பின்னர், இரவு 09.00 மணிக்கு எனது வீட்டு முற்றத்தில் இருந்த ஊஞ்சலில் நான் உட்கார்ந்து கொண்டிருந்தேன். அப்போது, குவாலிஷ் காரில் எனது மாமனார் மருதைய்யாவும், எனது கணவர்

ராஜேந்திரன் என்பவரும் வந்தார்கள். அப்போது, காவேரி சுப்பையாபாண்டியனின் வீட்டிற்கு முன்னால் இருந்து எதிரிகள் இசக்கிபாண்டியன், சதீஷ், குமார் ஆகிய 3 பேரும் எனது கணவரும், மாமனாரும் வந்த குவாலிஷ் காரை எங்களது வீட்டிற்கு முன்பு வரவிடாமல் 3 பேரும் 3 பைக்கை குறுக்கே மறித்து நிறுத்தினார்கள். அப்போது, சதீஷ் கல்லை எடுத்து காரின் முன்பக்க கண்ணாடியை உடைத்து விட்டார். அதன் பின்னர், எனது கணவரும், எனது மாமனாரும் காரிலிருந்து கீழே இறங்கினார்கள்.

அப்போது, இசக்கிபாண்டியன் இரும்பு கம்பியை வைத்து எனது மாமனாரை பார்த்து "நீ உயிரோட இருக்கப்போய் தானே, என் மேல கேஸ் போடுற" என்று சொல்லி இரும்புக்கம்பியால் எனது மாமனாரின் தலையில் வலது பக்கம் ஓங்கி அடித்தார். உடனே எனது மாமனார் மருதையாவிற்கு தலை வழியாகவும், மூக்கு வழியாகவும் இரத்தம் வந்தது. அப்போது, அதனை தடுக்க வந்த எனது கணவரை எதிரி குமார் கழுத்தோடு சேர்த்து நகர விடாமல் இறுக்க கட்டி பிடித்து கொண்டார். அப்போது இசக்கிபாண்டியனின் டிரைவர் சிங்கத்துரை அரிவாளால் எனது கணவரின் கழுத்தில் வைத்து "நீ நகர்ந்தால் உன்னை வெட்டி விடுவேன்" என்று சொல்லி அசைய விடாமல் மிரட்டினார்.

அப்போது, எதிரி இசக்கிபாண்டியன் எனது கணவரை பார்த்து, "நீ தானே பிரசிடன்ட், நீ முதலில் செத்து ஒழி" என்று சொல்லி கம்பியால் எனது கணவரின் பின் மண்டையில் கம்பியால் ஓங்கி அடித்தார். எதிரி காவேரி சுப்பையா பாண்டியன் எனது மாமனாரை கம்பியால் தாக்கினார். இசக்கிபாண்டியனின் மாமனார் சுப்பையாபாண்டி பெரிய கல்லை வைத்து

எனது மாமனார் மருதைய்யாவின் இடது நெற்றியில் அடித்தார். தலையாரி தங்கராஜ், காவேரி சுப்பையாபாண்டி, குமார், சதீஷ், கணேசமூர்த்தி, இசக்கிபாண்டி, சிங்கத்துரை ஆகிய அனைவரும் சேர்ந்து எங்கள் வீட்டிற்கு எதிர் வீட்டுப்பக்கம் கிடந்த தென்னை மட்டை, பெரிய அளவிலுள்ள ஜல்லி ஆகியவற்றை கொண்டு எனது கணவரையும், மாமனாரையும் சரமாரியாக தாக்கினார்கள். அதில் ஆறுமுகச்சாமி என்பவர் எனது மாமனாரை எங்கள் வீட்டின் கேட்டில் சாய வைத்துக்கொண்டு கையால் நெஞ்சில் பலமுறை குத்தினார்.

அப்போது, நான் அவரிடம் எனது மாமனார் ஏற்கனவே பைப்பாஸ் சர்ஜரி செய்திருக்கிறார். வயதானவரை இப்படி தாக்காதீர்கள் என்று சொன்னேன். அப்போது ஆறுமுகச்சாமி என்னை ஏட்டி தேவடியா முண்ட, உன் வேலையை மட்டும் பாரு, நீ இங்கு இருந்தால் உன்னையும் எதாவது பண்ணிருவேன், அடிச்சு கொன்னு விடுவேன் என்று மிரட்டினார். அதன் பின்னர் எனது மாமனாருக்கு இரத்தம் அதிகமாக வெளியேறியதினால் மயக்கமாகி கீழே விழுந்து விட்டார்.

இந்த சம்பவம் நடக்கும் போது, எதிர்த்த வீட்டில் இருந்த சீதாலட்சுமி, வடிவு, ஆகியோர்கள் "அடிக்காதீர்கள், இதெல்லாம் தப்பு" என்று தடுக்க வந்தார்கள். அதற்கு எதிரிகள் காவேரி சுப்பையாபாண்டியனும், தலையாரி தங்கராசும் அவர்களை பார்த்து "உங்களுக்கென்ன அவர்கள் அடி வாங்கினால் வாங்கட்டும், உங்க வேலையை மட்டும் பேசாமல் பார்த்துகோங்க" என்று சொல்லி, அவர்களை தடுத்தார்கள். எனது மாமனார் மயக்கம் போட்டு கீழே விழுந்தவுடன் தலையாரி தங்கராசு அடிக்க வந்த அனைவரிடமும் ஏலே கிழட்டு பயல் செத்து விட்டான் எல்லோரும் ஓடுங்க

என்று சொன்னவுடன் எதிரிகள் அனைவரும் அந்த இடத்தை விட்டு ஓடிவிட்டார்கள். அதன் பின்னர் நானும், சீதாலட்சுமி, தமிழ் ஆகியோர்கள் எனது மாமனாரை தண்ணீர் தெளித்து எழுப்பி விட்டோம். அதன் பின்னர் எனது கணவரின் தம்பி டாக்டர் சரவணன் என்பவருக்கு தகவல் தெரிவித்து அவர் வந்து எனது மாமனாரையும், எனது கணவரையும் அவருடைய காரில் கடையநல்லூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றார்.

தங்கப்பாண்டியனும், முகேஷிம் இருசக்கரவாகனத்தில் மருத்துவமனைக்கு சென்றார்கள். தமிழ், சீதாலட்சுமி ஆகியோர்கள் எனது மாமனாருடன் காரில் சென்றார்கள். கடையநல்லூர் அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை அளித்து விட்டு, பின்னர் மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். என் மாமா 10 நாட்களும், எனது கணவர் 4 நாட்களும் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார்கள். இது குறித்து 2 நாட்கள் கழித்து DSP என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.11.10 15:27:05 +0530

<u>வாக்குமூலம்</u>

<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>

<u>வழக்கு எண் : SC.No. 443/2016</u>

<u>வழக்கு சாட்சி PW-4</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சீதாலட்சுமி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | கருப்பசாமி | தொழில் | : | தூய்மைப்பணியாளர் |
| கிராமம் | : | சுந்தரேசபுரம் | வயது | : | 42 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of November 07th, 2025.

**(4,6,7 எதிரிகள் ஆஜரில்லை. இதர எதிரிகள் ஆஜர். கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் சுந்தரேசபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் தூய்மைப்பணியாளராக பணிபுரிந்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1 மருதைய்யா, அ.சா.2 ராஜேந்திரன் ஆகியோர்களை எனக்கு தெரியும். எதிரிகள் மற்றும் அ.சா.1, அ.சா.2 ஆகியோர்கள் என்னுடைய உறவினர்கள். 15.02.2013 ம் தேதி, வெள்ளிக்கிழமை இரவு 09.00 மணிக்கு நான் எனது வீட்டிற்குள் நாடகம் பார்த்து கொண்டிருந்தேன். எனது வீடு ஓட்டு வீடு. எனது வீட்டின் ஓட்டின் மீது கல் விழுந்தது. உடனே நானும், எனது மாமியார் வடிவும் வெளியே வந்து பார்த்தபோது, எதிரிகள் இசக்கிபாண்டி, தங்கராசு, சுப்பையாபாண்டியன், குமார், சதீஷ், கணேசமூர்த்தி, ஆறுமுகச்சாமி ஆகியோர்களுக்கும், ராஜேந்திரன் மற்றும் DSP மருதையாபாண்டியனுக்கும் அடிதடி சண்டை நடந்தது. அதன் பின்னர் நான் வெளியே வந்து சத்தம் போட்டேன். "அடிக்கிறார்கள், அடிக்கிறார்கள்" என்று நான் சத்தம் போட்டேன். எதிரிகள்

அனைவரும் ராஜேந்திரன் மற்றும் DSP மருதையாபாண்டியன் ஆகியோர்களை லாடு கம்பி, மட்டைக்கம்பு, கல் ஆகியவற்றால் தாக்கினார்கள். பக்கத்தில் யாரும் போக முடியாத அளவிற்கு கல்லை வைத்து எறிந்தார்கள். அப்போது எதிரி தங்கராஜ்(சித்தப்பா) "கிழட்டு பைய செத்து போயிட்டான், எல்லோரும் ஓடுங்க" என்று சொன்னவுடன் எதிரிகள் அனைவரும் ஓடி விட்டார்கள்.

அதன் பின்னர் நான் மருதையாபாண்டியனை தூக்கி, தண்ணீ தெளித்து ராஜேந்திரனையும் கடையநல்லூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றோம். சரவணனுக்கு போன் செய்தோம், அவர் வந்தார். முகேஷிம் என்னுடன் காரில் வந்தார். கடையநல்லூர் மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை அளித்து விட்டு, மேல்சிகிச்சைக்காக காயம்பட்ட இருவரையும் திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு கொண்டு போக சொன்னார்கள். எனது சேலை முழுவதும் இரத்தம் பட்டிருந்ததால், நான் வீட்டிற்கு வந்து விட்டேன். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.11.10 15:27:13 +0530